Registered as a NewsPaper | மக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 30 | (12 - 04 - 1992) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை: 54

## அதிகாரிகள் புறக்கணிப்பு கல்வி பெரிதும் பாதிப்பு

தொடர்ச்சியாக இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளினாலும் கல்வி அதிகாரிகளின் புறக்கணிப்பினாலும் வவுனியா கிராமப்புற மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்திருப்பது வெளிப்பட்டுள்ளது. சமீபத்தில் வெளிவந்துள்ள க. பொ. த. சாதாரணதர பரீட்சையின் பெறுபேறுகளில் கிராமப்புறப் பாடசாலைகளைச் சேர்ந்த பெருந்தொகை மாணவர்கள் சித்தியடையவில்லை. கிராமப்புறங்களில் இராணுவ நடவடிக்கைகளின்போது மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துவருவது தெரிந்ததே. சமீபகாலத்தில் ஏராளமான பாடசாலைகள் குண்டு வீச்சு நடவடிக்கைகளின்போது முற்றாகச் சேதமடைந்துள்ளன. பல பாடசாலைகளில் ஆசிரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ உயர்பீடத்தில் நெருக்கடி

# அதிகார பகிர்வில் தளபதிகள் இழுபறி

## விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த தந்திரத்தில் முரண்பாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த தந்திரோபாயம் குறித்து இராணுவ தளபதிகள் மத்தியில் பாரிய முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. இதனால் இராணுவ உயர் பீடத்தில் நெருக்கடியான நிலைமை உருவாகியுள்ளது. இதேவேளை சிறிலங்கா முப்படைத் தளபதிகளுக்கும் கூட்டுப்படைத் தலைமையக உயர் அதிகாரிகளுக்கும் மத்தியில் அதிகாரப் பகிர்வு குறித்தும் பெரும் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த முரண்பாடுகளும், பிளவுகளும் காரணமாக பிரேமதாசா அரசு குழம்பிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் போர்முறைத் திட்டம், தந்திரோபாயம் ஆகியன குறித்து இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெத்தினாவுக்கும், கூட்டுப்படைத் தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுக்கும் மத்தியில் பாரிய கருத்து முரண்பாடு உருவாகியுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவத்தின் கட்டளை இடும், கட்டுப்படுத்தும் அமைப்பில் அண்மையில் ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவினால் கொண்டுவரப்பட்ட அதிகார மாற்றமே இந்நெருக்கடி காரணமாகும். இந்நெருக்கடி அண்மையில், இவ் அதிகார மாற்றம் தொடர்பாக ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிற்கு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா எழுதிய கடிதம் ஒன்றினால் மேலும் தீவிரமாகியுள்ளது.

இக் கடிதத்தில், இராணுவத் தலைமைப் பீடத்தின் அனுமதியின்றி கூட்டுப்படை தலைமையக அதிகாரிகள் வடக்கு-கிழக்கு யுத்த முனைகளுக்கு செல்லக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததாம். இது தொடர்பாக தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா பலத்த ...வும் தெரியவருகிறது.

இதனை அடுத்து இப் பிரச்சினை ஜனாதிபதி பிரேமதாசா வரையிலும் கொண்டு செல்லப்பட்டதாகவும் இராணுவத் தளபதியின் கடிதம் குறித்து திரு. பிரேமதாசா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கி இன்று திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கிக் கிளைகள் மட்டுப்படுத்தப்பட்ட சேவைக்காக இன்று திறக்கப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காலை 9 00 மணி முதல் 11.00 மணி வரை திறந்திருக்கும் போது மட்டுப்படுத்தப்பட்ட வங்கிச் சேவைகள் வழங்கப்பட இருக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் அமெரிக்கத் தூதுவரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய முயற்சிகள் நடைபெறுவதாக தெரிய வருகின்றது. எனினும் இதனை எந்தத் தரப்பினர் ஒழுங்கு செய்கின்றனர் என்பதையோ, எப்போது இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறப்போகின்றது என்பதைப் பற்றியோ எதையும் அறிய முடியவில்லை.

அநேகமாக லிபியா மீது மேற்கொள்ளப்படவுள்ள பொருளாதாரத்தடையை ஆட்சேபித்தே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெறலாம் என விசயமறிந்தவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில்

## ராணுவத்தின்பாதுகாப்புக்கு அகதி முகாம் தமிழர்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவ முகாமின் பாதுகாப்பிற்காக அகதிமுகாமிலிருந்த தமிழ் மக்கள் பிடித்துச் செல்லப்பட்டு இராணுவ முகாமின் முன்பாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இம் மாதம் முதலாம் திகதி அமிர்தகழியில் அமைந்துள்ள அகதிகள் முகாமிலிருந்த 72 தமிழ் குடும்பங்கள் சிறிலங்கா இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டனர். இவர்கள் மட்டக்களப்பு நகர இராணுவ முகாமிற்கு முன்பாக இப்பொழுது தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவே இவ்வாறு தமிழர்கள் அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில்

## தாக்கிய புலிகளைத் தேடி இராணுவ நடவடிக்கையாம்

திருக்கோணமலை. மட்டக்களப்பு மாவட்டங்களில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் இவ்விரு மாவட்டங்களிலும் புலிகள் நடாத்திய இருவேறு தாக்குதல்களில் 20 சிறிலங்கா இராணுவத்தினர் பலியாகியது தெரிந்ததே.

இந்தத் தாக்குதல் நடவடி

(8 ஆம் பக்கம் பார்க்க)

சிசிலுக்கு ஹமில்டன் சவால்

## கிழக்கில் புலிகளை ஒழித்தால் பதவி விலகத்தயார்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் மூன்று மாதத்திற்குள் புலிகளை விரட்டியடித்து சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கும், தேர்தலை நடத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ண தெரிவித்துள்ளார். மேலும், ...வும் தெரிவித்துள்ளார்.

ஆனால், இது ஒரு சாத்தியப் பாடற்ற திட்டம் எனத் தெரிவித்துள்ளார் முப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் ...தார் இதேவேளை இராணுவத்தளபதி தனது திட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் காட்டினால் தாம் பதவிவிலகவுள்ளதாக கூட்டுப்

## தலைவர் பிரபா பணிப்பு;

ஹமலடன் வன்சிங்க பலத்த ஆட்சேபம் எழுப்பியதாகவும், இதனைத் தொடர்ந்து பலத்த வாக்குவாதம் ஏற்பட்டதாக

தனது நோக்கத்தை நிறைவேற்றத் தன்னிடம் தனியாரதொரு திட்டம் இருப்பதாக

வன்சிங்க அத்தோடு, இது மக்களைப் பெரிதும் பாதிக்கும் எனவும் அவர் தெரிவித்

படைத் தலைமையக அதிகாரிகள் சவால் விடுத்துள்ளனர்.

# 27 கைதிகள் விடுதலை

(வவுனியா)

புதுவருடத்தை முன்னிட்டு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் உத்தரவிற்கமைய தமிழீழ காவல் துறையினரால் கைதிகளில் பலர் விடுதலையானார்கள்.

ஒரு பெண் உட்பட இருபத்தேழு கைதிகள் நேற்று பிற்பகல் காவல் துறை தலைமை அலுவலகத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் இந்த விடுதலை நிகழ்வில் கலந்து கொண்டார்.

கைதிகளின் பெற்றோர், உறவினர்களிடம் கைதிகள் ஒப்படைக்கப் பட்டனர்.

பல விதமான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் இந்த விடுதலை செய்யப்பட்டவர்களில் அடங்குவர். விடுதலை செய்யப்பட்ட அனைவரும் சாதாரண குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே என்று நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் காவல் துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் குறிப்பிட்டார்.

இரண்டு அல்லது மூன்று மாத காலமாக தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட கைதிகளே விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த அவர் விடுதலையானவர்களில் சிலர் நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

பணமோசடி, கொள்ளை, சண்டை ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட கைதிகள் பெற்றோர் முன்னிலையில் அறிவுறுத்தப்பட்டு ஒப்படைக்கப் பட்டனர். (தி)

# சமூகச் சீர்கேட்டில் ஈடுபடாதீர் எதிரிக்குச் சாதகமாகி விடும்

## — காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

(யாழ்ப்பாணம்)

இன்று நாம், எமது மண்ணில் பயங்கர எதிரிக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறோம். இச்சமயத்தில் இடம்பெறும் சமூகச் சீர்கேடுகள் எதிரிக்குச் சாதகமாக அமைந்துவிடும்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்கள், நேற்றுஇடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு சர்வதேச சக்திகள் எதிரிக்கு உதவுகின்றன.

நாம் எதிரியை எமது மண்ணிலிருந்து அகற்ற வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக உரிமைகளைப் பெற்று வாழ வேண்டும். இதற்காகவே போராடிக்கொண்டிருக்கிறோம்.

உங்களைத் தண்டிக்கவேண்டும் என்ற விருப்பம் எமக்கில்லை. நாம் மக்களுக்காகவே போராடுகிறோம். திட்டமிட்டு எவரும் குற்றம்செய்வதில்லை. குற்றச் செயல்கள் செய்வதிலிருந்து விலகி எமது போராட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் மேலும் குறிப்பிட்டார். (தி)

# தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

தெல்லிப்பளை வட்டனவப் பிரிவில் இன்று தெல்லிப்பளை பழம் பிள்ளையார் கோயிலில் தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளன.

காலை 8.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை அடையாள உண்ணாவிரதம் இடம்பெறும்.

பிற்பகல் 7.00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் நெடுங்கீரன், மதிவாணி, நாவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள கலைநிகழ்ச்சிகளில் சின்னமணி குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

# கொழும்பில் பதற்றநிலை பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

(கொழும்பு)

கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நேற்று முன்தினம் மகரகமவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்குக் காரணமாம்.

கொழும்பு நகரின் கேந்திர நிலையங்களில் பெருமளவில் பாதுகாப்புப் படையினர் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். வாகனங்களும் சந்தேகத்துக்கிடமான பொதிகளும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப் படுகின்றன.

புது வருடத்தை முன்னிட்டு சன நெருக்கடி அதிகரித்து காணப்படுவதால் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரத்தின் பிரதான நுழைவாயில்களில் வைத்து வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப் படுவதால் பெரும் போக்குவரத்து நெருக்கடி உருவாகியுள்ளதாகவும் அறிய வருகிறது.

# அம்பாறை குண்டு வெடிப்பு 80 பேர் காயமென அறிவிப்பு

அம்பாறை பஸ்நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 80 என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குண்டு வெடிப்பு இடம்பெற்ற தனியார் பஸ் கல்முனையிலிருந்து அம்பாறை பஸ் நிலையத்திற்கு வந்ததாகவும் அது வழமையாக இந்த பாதையில் சேவையில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பவதினம் அம்பாறை பஸ் நிலையத்திற்கு வந்ததும் அதன் பெயர்ப் பலகை மொனராகலை என மாற்றப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி இராணுவம் பின்வாங்கியது

பூநகரி கறுக்காய் தீவில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவம் அங்கிருந்து பின்வாங்கிவிட்டது. நேற்றுப்பகல் அங்கிருந்து பின்வாங்கிய சிறிலங்கா இராணுவத்தினர் ஞானிமடத்தில் நிலைகொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அரசால் எனக்கு உயிராபத்து பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவுக

## உடுகம்பொல சிறிமாவிற்கு கடிதம்

தனக்கு உயிராபத்து விளைவிக்க அரசினால் இப்பொழுது திட்டமிடப்படுவதாகவும் எனவே இதிலிருந்து பாதுகாத்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பி. உடுகம்பொல எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இக்கடிதத்தை அவர் வெளியிட்டார்.

கறுப்புப் பூனைகள் என அழைக்கப்படும் அரசாங்க ஏற்பாட்டிலான கொலைக் குழுக்கள் 1988, 1989 ஆண்டுகளில் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களின் கொலைகள் குறித்து தான் சில விபரங்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உடுகம்பொலவின் அறிக்கை வெளியிட்டோர் விசாரணை

(கொழும்பு)

கட்டாய ஓய்வில் இருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொலவின் அறிக்கையை வெளியிட்ட கொழும்புப் பத்திரிகை ஆசிரியர்களும், செய்தியாளர்களும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினால் விசாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லங்கா தீப்ப, திவயின, ஐல

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரணம் வழங்கக் கோரி சம்பளம் பகிஷ்கரிப்பு

(தலவாக்கலை)

வரட்சிநிவாரணம் வழங்கக் கோரி தலவாக்கலை கிறேட் வெஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 1200 தொழிலாளர்கள் தமக்குரிய மார்ச் மாத சம்பளத்தை வாங்காது பகிஷ்கரித்து வருகின்றனர் என தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளையில் இப் பகுதியைச் சேர்ந்த சமர் செட், லோகி, பாம்ஸ்டன் போன்ற இன்னும் பல தோட்டங்கள் வரட்சி நிவாரணத்துடன் அரசாங்கம் ஏற்றுக் கொண்டபடி 25நாட்களுக்குரியசம்பளத்தை வழங்க வேண்டுமெனக் கோரி பகிஷ்கரிப்பில் ஈடுபட முடிவு செய்துள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் தோட்ட தொழிலாளர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து வழங்குவதாகக் கூறப்பட்ட நூறு ரூபாய் சம்பள உயர்வு இப் பகுதி தோட்டங்கள் பலவற்றில் முறையாக இன்னும் வழங்கப்படவில்லை.

பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சு நூறுரூபா சம்பள உயர்வு தொடர்பானஅறிவித்தலை அண்மையில் வெளியிட்ட போதும் தோட்ட நிர்வாகங்களினால் இது கடைப்பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இவ்வாறு வழங்கப்படாதுள்ள நூறு ரூபா சம்பள அதிகரிப்பும் தற்போது வழங்கப்படவுள்ள மார்ச்மாத சம்பளத்துடன் வழங்கப்பட்டாக வேண்டும் என்றும், தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஆரியரட்னாஅரசியல்ஈடுபாடு சர்வோதயாவில்பலர்விலகல்

(கொழும்பு)

சர்வோதய இயக்கத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்னா அரசியலில் இறங்கியுள்ளதை யடுத்தும் இயக்கத்தை அரசியலில் ஈடுபடச் செய்ததனையும் ஆட்சேபித்து சர்வோதய இயக்க சிரேஷ்ட அங்கத்தவர்கள் பலர் இயக்கத்தில் இருந்து விலகுவதற்கு முடிவு செய்துள்ளனர்.

இதற்கு முன்னோடி 20 வருட காலம் இயக்கத்தில் இணைந்தவரான வண.மாதம்பகம அசாஜிதேரர் நேற்று முன்தினம் உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

இவர் கட்சி அரசியலில் இணைந்துள்ளதாக தனக்கு தகவல் கிடைத்துள்ள போதும் இயக்கத்தை பாதுகாப்பதற்காக அதை மறைத்து தொடர்ந்து செயற்பட்டதாகவும் சுதந்திரக் கட்சியில் பாதயாத்திரையில் சர்வோதய இயக்கம் கலந்து கொண்ட பின்னரே இவ்வுண்மை தெரியவந்ததாக குறிப்பிட்டார்.

இவ் இயக்கம் அரசியலில் இணைவதை 8000 நிரந்தர தொண்டர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் மறைந்துவரும் பிரபுத்துவ அரசியலுக்கு, ஏழை' கிராமவாசிகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்கென வெளிநாடுகள் சர்வோதயத்துக்கு அனுப்பிவைக்கும் பணம் உபயோகிக்கப்படுவதையிட்டு கவலை அடைவதாகவும் தெரிவித்தார்.

## ஒத்திவைப்பு

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கோண்டாவில் கேட்போர் கூடத்தில் இன்று (12-4-92) நடைபெற இருந்த வாராந்தக் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை வங்கி தமிழ்புதுவருட விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி தமிழ்புதுவருட விழா ஒன்றினை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் நடாத்தவுள்ளது.

அன்றையதினம் காலை 8.00 மணிமுதல் 8.30 மணிவரை புதுவருடக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அன்றையதினம் பணவைப்பிலீடுபடும் வாடிக்கையாளர்களுக்கு புதிய நாணயம் கைவிஷேடமாக வழங்கப்படவுள்ளதாக பிரதானகிளை முகாமையாளர் தெரிவித்தார்.

மேலும் அன்றையதினம் காலை 9.00 மணிமுதல் வழமையான வங்கிக்கருமங்கள் நடைபெறவுள்ளதாகவும் வாடிக்கையாளர்களையும் ஆதரவாளர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறும் பிராந்திய முகாமையாளர் மேலும் கேட்டுள்ளார். (ச)

## ஆசிரியர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கெற்பலி கமலாசினி பாடசாலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு வரும் 14 முதல் 18 ஆம் திகதி வரை கருத்தரங்கு நடைபெறவுள்ளது. சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் இக் கருத்தரங்கில், தெரிவு செய்யப்பட்ட அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வேலணைக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் சி. புலேந்திரன் கேட்டுள்ளார்.

கச்சேரி புனர்வாழ்வுப் பிரிவின் அனுசரணையுடன் வேலணைக் கோட்டமும் சாவகச்சேரிக் கோட்டமும் இணைந்து இக்கருத்தரங்கை நடத்தவுள்ளன.

# மனிதர்களும் நினைவுகளும் ஜே. ஆர். எழுதிய சுயசரிதை

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் எழுதப்பட்ட ''மனிதர்களும் நினைவுகளும்'' (Men and Memories) என்னும் நூல் நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிடப்பட்டது.

நூற்றி எண்பத்து ஐந்து பக்கங்களைக் கொண்ட இந் நூலை முப்பது நாட்களில் எழுதியதாகவும், விகாஸ் பப்ளிசிங் ஹவுஸ் எனப்படும் புதுடில்லியிலுள்ள வெளியீட்டு நிறுவனம் இந்த நூலை வெளியிட்டிருப்பதாகவும் ஜெயவர்த்தனாவின் செயலாளர் பிரேமதிலக மப்பிட்டிகம கூறியுள்ளார்.

ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் சுயசரிதையையும் ஞாபக மூட்டல்களாகவும் எழுதப்பட்டுள்ள இந் நூலில் சுதந்திரத்திற்கு முந்தைய இலங்கை, நவீன வரலாறு சார்க்கின் தோற்றமும் வளர்ச்சியும், மகாத்மாகாந்தி பற்றியும் சேர்க்கப்பட்டுள்ளன.

# வவுனியா தபால் பொதிகள் இராணுவம் சோதனை

(வவுனியா)

வவுனியாவில் இராணுவம் தபால் பொதிகளை ஏற்றிக் கொண்டு சென்று இறக்கிவிடும் வேலையில் ஈடுபட்டுவருகிறது.

பிரதமதபாலகத்தில் விநியோகிப்பதற்கென வைக்கப்படும் தபால் பொதிகளையும் உபதபால் அதிபர்கள் மற்றும் தபால்சேவகர்களையும் தபாலகத்திலிருந்து ஏற்றிவரும் இராணுவத்தினர் பேயாடிகூழாங்குளம் சோதனை நிலையப் பகுதியில் இறக்கிவிடுகின்றனர்

இராணுவத்தால் தபாலகத்தில் வைத்து சோதனை செய்யப்பட்ட தபால்கள் மட்டும் பொதிகட்டப்பட்டு விநியோகிப்பதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.

வவுனியா கிராமப் புறங்களிலிருந்து தபால் பொதிகளுடன் செல்லும் தபால் சேவகர்கள் சோதனை செய்யப்பட்டு தபால் பொதிகளும் கடும் சோதனைக்குட்படுத்தப்படுகின்றது இதன் பின்னர் இராணுவ வாகனத்தில் பிரதம தபாலகத்திற்கு பொதிகளும் தபால் சேவகர்களும் கொண்டு செல்லப்படுகின்றனர். (தி)

# கைத்தொழில் ஆரம்பிக்க விரைவில் திட்டங்கள்

-எம். எஸ். செல்லச்சாமி

மலையக மூலவளங்களையும் மனித வளங்களையும் பயன்படுத்தி புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான திட்டமொன்று விரைவில் அமுல் படுத்த உள்ளதாக கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமி நேற்று முன்தினம் அமைச்சில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; இது தொடர்பாக ஆரம்பத்தில் ஊவா பகுதியிலும், நுவரெலியாப் பகுதியிலும் உள்ள மூலவளங்கள் பற்றிய அறிக்கையை தருமாறு அவ்வவ் உதவி அரசாங்க அதிபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்

இவை பற்றிய அறிக்கைகள் கிடைத்ததும் எதிர்வரும் ஜூன் மார்கழியில் அவற்றை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். இதே போன்று மலையகத்திலும் ஏனைய பகுதிகள் பற்றிய அறிக்கைகளும் பெறப்பட்டு கைத்தொழில் திட்டங்கள் அமைக்கப்படவுள்ளன.

மலையகத்தில் தேயிலையைத் தவிர எத்தனையோ மூலவளங்கள் உள்ளன இவை கவனிப்பாரற்றநிலையில்கிடக்கின்றன.

இவற்றை இனங்கண்டு கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுமானால் வேலையில்லாப் பிரச்சினை தீர்வதோடு நாட்டின் பொருளாதாரமும் உயரும் சாத்தியக் கூறுகள் உண்டு.

## கொம்படிப்பாதை படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்து வெளியே செல்வதற்காக இதுவரை பயன்படுத்தப்பட்டுவந்த ஊரியான் படகுச் சேவை நேற்று நள்ளிரவுமுதல் நிறுத்தப்பட்டுள்ளதாக படகுச் சேவை பொறுப்பாளர்கள் அறிவித்துள்ளனர் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளமையே இச்சேவைநிறுத்தப்பட்டமைக்கான காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனினும் பிரயாணிகள் நலன்கருதி வண்ணான்குளம்-கொம்படிப்பாதைக்கான பட

## வதிவிட வேளாண்மைப் போட்டி புதனன்று பரிசளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

1991 - 92 ஆம் ஆண்டின்வதிவிட வேளாண்மைப் போட்டியின் பரிசளிப்பு விழா கோண்டாவில் கலைவாணி விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும்புதன்கிழமை (15-04-92) மாலை 7 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியை செந்தாளன் அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து தலைமையுரையை இளம்பரிதிஅவர்களும் சிறப்புரைகளை திரு ரவி, (தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர்) பாலகுமார், பேராசிரியர் செல்வி ஜெயா, திரு பரா, க. சண்முகநாதன், கா. குணரெட்ணம், அரசரெட்ணம், சிவசாமி ஆகியோர்கள் வழங்க உள்ளனர்

பரிசு பெற்றோருக்கான பரிசில்களை விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன் அவர்கள் வழங்க உள்ளார்.

மேலும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## புதுவருட விழா துர்க்காதேவி ஆலயம்

நாளை 13-ம் திகதி திங்கட் கிழமை தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அதிகாலை 4 30 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை ஆங்கீரஸ வருடப்பிறப்பு

## வரி விளம்பரம்


**HAPPY Tailors**

புதுவருடத்தை முன்னிட்டு வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி! இன்றைய நவநாகரிக வாலிபர்களின் சேர்ட், ஜீன்ஸ், சோர்ட்ஸ் என்பன அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப குறைந்த கட்டணத்தில் தைத்துக் கொடுக்கப்படும். சேர்ட், ஜீன்ஸ், Tசேட் என்பன குறைந்த விலையில் ரெடிமேற் ஆகவும் பெற்றுக்கொள்ளலாம். ஹப்பி - தையல் அகம் கே.கே எஸ். றோட் யாழ்ப்பாணம். (2432)


## சிவசக்தி இந்து இளைஞர்மன்றம் உதயம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவன்கோயிலடி இளைஞர் ஒன்று கூடி சிவசக்தி இந்து இளைஞர் மன்றம் என்ற பெயருடன் ஒரு சமூக சேவை மன்றத்தை உருவாக்கியுள்ளனர்

க. நரேந்திரநாதன் தலைவராகவும், கஜதேவசங்கரி செயலாளராகவும், த. ராஜாஜி செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் மன்றத்தின் காப்பாளர் இராசா வாமதேவன்.

## சட்டக் கல்லூரி மாணவி மீது வழக்கு தாக்கல்

1.1.88 க்கும்1.8.89 க்கும் இடைப்பட்ட காலத்தில் கொழும்பில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவுவழங்கியதாக தெரிவித்து தாளையடியைச் சேர்ந்த ஜோன் பொஸ்கோ இருதயநாதன் என்பவர் மீதும் கொழும்பு பல்கலைக்கழக 3ஆம் வருடசட்டப்படிப்பு மாணவியும் மயிலிட்டியைச் சேர்ந்தவருமான செல்வி இந்திரா ஞானராணி ஆகிய இருவர்மீதும் சட்டமா அதிபர் வழக்குத் தொடுத்துள்ளார்.

இவர்கள் மீதான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நீதிபதி ரி பி உணம்புவ முன்னிலையில் இம் மாதம் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துச் கொள்ளப்படவுள்ளது.

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம்...

**1992. 04. 12**

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 7 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-



## அமரர் க. செல்லத்துரை

(B. A, Dip. in. Ed, M.A. Ed)

(முன்னாள் அதிபர், யா/மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்)

மலர்வு:- 1.6.1942 உதிர்வு:- 12.4.1989

எங்கள் குடும்பத்தின் மேல்
நீங்கள் சொரிந்த அன்பும், ஆதரவும்
எங்கள் ஆயுள் உள்ளவரை
துணைவரப் பிரார்த்திக்கும்

- V.M.K. குடும்பத்தினர்

கண்டி வீதி,
சாவகச்சேரி
(2408)

நலன்கருதி வண்ணான்குளம்-கொம்படிப்பாதைக்கான படகுச்சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடக்கம் மாலை 7.00 மணி வரை ஆங்கீரஸ வருடப்பிறப்பு விழா நடைபெறும் என தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை அறிவித்துள்ளது.

## பசறை தமிழ்க்கடைகளில் கப்பம் வேண்டும் கோஷ்டி

(பதுளை)

பசறைப் பகுதி தமிழ் வர்த்தகர்களிடம் பயமுறுத்திப் பணம் பறிப்பதில் இனந்தெரியாத கோஷ்டியினர் ஈடுபட்டு வருவதாகத் தொழிற்சங்க வட்டாரங்களிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

புலிகளுக்கு நிதியுதவி செய்கின்றீர்கள் அதுபோல் எங்களுக்கும் நிதியுதவி செய்யுங்கள் என மேற்படி கோஷ்டியினர் தமிழ் வர்த்தகர்களிடம் கோருகின்றனர் என்றும்,

இக்கோஷ்டியினர் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகளுக்கு மாத்திரம் சென்றே நிதியுதவி கோருவதாகவும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

45 ஆவது நாள்

## நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்



வீரவேங்கை
மயிலினி
(சின்னத்தம்பி
ஜீவராணி)

தாயக மண்ணில்
16 - 06 - 1973

தாயகமண்ணுக்காய்
28 - 02 - 1992

நாட்டை நினைத்ததால்
வீட்டை மறந்தாய்
தேசம் நினைத்ததால்
பாசம் மறந்தாய்

(அக்கா வைதேகியும் அன்புமணி தம்பியும் உன்பணிதொடர்கிறார். உறுதுணையாவோம்)

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

பெற்றோர், உடன் பிறப்புகள்,
சித்தப்பாமார், சின்னக்கிளிஅம்மா,
உறவினர்.

(சி/4254)

7 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

**கோபு** (க. தருமராசா - மட்டக்களப்பு)

கொக்குவிலில் - இந்தியப் படையுடனான மோதலின் போது நிகழ்ந்த எறிகணைத் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**ராஜு** (மோகன்-மன்னார்)

1989ஆம் ஆண்டு கரந்தனில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கண்ணன்/ஜெமினி** (சுப்பிரமணியம் திருநாவுக்கரசு-கோண்டாவில் கிழக்கு)

கச்சாயில், இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். ஜெனா** (சுந்தரகுலசிங்கம் சிவராசா-வரணி வடக்கு)

வவுனியா, பூம்புகார்ப்பகுதியில், இந்தியப்படையினரின் வாகனத் தொடரை வழிமறித்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் சண்முகம்** (முத்துக்குமாரு சண்முகராசா-அரியாலை)

**2-ம் லெப். சின்னச்சுதா / அகிலன்** (கதிர்காமநாதன் சுதாகரன் - 52/61, பவிகரன் வீதி, கொழும்புத்துறை)

இதே ஆண்டு இந்தியப் படையினர் மற்றும் தேச விரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது தீவிர ஆதரவாளரான-

**சபாபதிப்பிள்ளை கவிச்சந்திரன்** (அரியாலை)

மீசாலையில், தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட விக்னேஸ்வரா மகாவித்தியாலய அதிபர்.

1991 ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய-

**லெப். உத்தவா** (தங்கவடிவேல் சந்திரகுமார்-வல்வெட்டித்துறை)

**சிவம்** (முத்தையா சாந்தகுமார்-வத்திராயன் தாளையடி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4226)

## சிந்தனைக்கு

இயற்கையின் விதிகளில்
மூத்த முது விதி, தற்காப்புதான்.
— ஜான் ரைட்டன்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 12-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 65

# தமிழகத்திற்கு ஓடியோர் கோழைகளா?

"கோழைகளே தமிழ் நாட்டிற்கு அகதிகளாக வந்துள்ளீர்கள். இலங்கையில் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கூறுகின்றீர்கள். ஆனால், இலட்சக்கணக்கான மக்கள் அங்கு வாழ்கின்றனர்." என அண்மையில் தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழர் அகதி முகாம்களில் தமிழக அரசாங்க அதிகாரிகளினால் விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் துண்டுப் பிரசுரம் எவ்வாறாவது இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழ்நாட்டை விட்டு வெளியேற்றி விட வேண்டும் என்ற நோக்கில் விநியோகிக்கப்பட்டதாகும். அதாவது, இலங்கைத் தமிழ் அகதிகளை கேவலப்படுத்தி இழிவு படுத்துவதன் மூலம் தமிழகத்தில் இருந்து வெளியேற்ற தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அரசாங்கம் மேற் கொள்ளும் நடவடிக்கைகளாகும்.

இலங்கைத் தமிழ் அகதிகள் ஏமாற்றப்பட்டும், வற்புறுத்தப்பட்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்படுகின்றார்கள். இது அகதிகளுக்கான சர்வதேச நியமங்களை மீறும் ஒரு செயல் முறையாகும் என பல்வேறு மனித நேய ஸ்தாபனங்களும், உலக ஸ்தாபனங்களும் கண்டித்துள்ளன. இவ்வாரத்தின் ஆரம்பத்தில் கூட அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி ஹாசம் பேர்க்கான் இந்தியாவின் போக்கில் அதிருப்தி தெரிவித்தார். ஆனால், இலங்கைத் தமிழரை வெளியேற்றியே தீர வேண்டும் என தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா விடாப் பிடியாகவுள்ளார்.

இலங்கைத் தமிழர் தமது உயிரைப் பாதுகாக்கவே தமிழ் நாட்டிற்கு கடல் கடந்து அகதிகளாக ஓடினர். அவ்வாறு ஓடியவர்களில் சில நூறு தமிழர்கள் கடலுக்குப் பலியானது உண்டு. அதோடு, தமிழ் நாட்டிற்கு அகதிகளாகச் சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும், குழந்தைகளும், வயோதிபர்களுமே ஆகும். மேலும் தமிழ்நாட்டில் பெரும் செல்வமும், தொழில் வாய்ப்பும் கொட்டிக் கிடக்கிறது அங்கேயே உழைத்து அங்கேயே வாழலாம் என்ற நோக்கிலும் உயிரைப் பணயம் வைத்து எவரும் செல்லவில்லை. சிலவேளை,

# தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றங்கள் — ஒரு நோக்கு

**சி. வரதராஜன்**
கலைமாணி (சிறப்பு - பொருளியல்)

### அறிமுகம்

எந்த ஒரு நாட்டிற்கும் இறுதியாக இரண்டு மூல வளங்கள் காணப்படுகின்றன. அந்த நாட்டின் காணிகளும் அதன் மக்களுமே அந்த மூல வளங்கள் ஆகும். காணி என்பது ஒரு தேசிய மூலவளம். எங்கு அமைந்திருந்தாலும் காணி என்பது மிகப் பெறுமதி வாய்ந்ததும் வரையறுக்கப் பட்டதுமான ஒரு மூலவளம் ஆகும். நீண்ட காலமாகவே மனித சமுதாயத்தின் வாழ்க்கை. அதன் முன்னேற்றம் என்பவற்றுடன் காணி நெருங்கிய தொடர்புடையதாக இருந்து வந்துள்ளது. இதன் விளைவாகவே காணி தொடர்பான கொள்கைகளும் பிரச்சினைகளும் மனித சமூகத்தில் மிக முக்கியமான இடத்தினை வகித்து வந்துள்ளன. காணிப் பிரச்சினையைச் சரியான முறையில் கையாள்வதன் மூலமே ஆள்பவர்களினதும் ஆட்சிகளினதும் சமூக பொருளாதார முறைகளினதும் வெற்றி தோல்விகள் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதனைக் கடந்த கால வரலாறு பல்வேறு தடவைகள் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

1815 இல் கண்டி ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து இலங்கை பிரித்தானியர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1840 ஆம் ஆண்டில் முடிக்குரிய காணிகளில் அத்துமீறிய குடியேற்றம் தொடர்பான சட்டம் காலனித்துவ அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசாங்கத்தின் காணிக் கொள்கைக்கு சட்ட முறையான அங்கீகாரம் கிடைத்தது. கண்டி வெல்லச மாகாணங்களில் காணப்பட்ட விடுதலைப் போராளிகளின் கிராமிய பொருளாதாரத்தினைச் சிதைப்பதே இச்சட்டத்தின் உண்மையான நோக்கமாக இருந்தது 1818 ஆம் ஆண்டுக் கலவரமும் அதனைத் தொடர்ந்த மக்கள் எழுச்சியும் ஆள்பவர்களின் மனதில் பாதுகாப்பற்ற உணர்வு ஒன்றினை ஏற்படுத்தியது. இதனால் கெரில்லா போர் முறையில் ஆற்றல் கொண்டிருந்த விடுதலை வீரர்களின் புகலிடமாக இருந்த மத்திய மலை நாட்டை ஏனைய பிரதேசங்களுடன் இணைப்பது என அரசாங்கம் தீர்மானித்தது இப்பின்னணியிலேயே காலனித்துவக் காணிக் கொள்கை உருவாக்கப்பட்டது 1840 ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் மக்களின் குடியிருப்பிற்குள்ளாகாத காணிகள் அனைத்தும் முடிக்குரிய காணிகளாக மாற்றப்பட்டன. இதற்கும் மேலாக மக்களின் உடைமையாகவுள்ள, காணிகளைக் கூட முடிக்குரியதாக மாற்றுவதற்கு ஏதுவாக, 1897 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கக் காணிகள் கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்டதுஇச்சட்டத்தின் 24 ஆம்பிரிவுபின்வருமாறு கூறுகின்றது: "தான் உண்மையாகக் குடியிருக்கும் காணிக்கு மேல் எவரேனும் ஒன்று அல்லதுஅதற்குமேற்பட்டகாணித் துண்டுகளுள் குடியிரு இருப்பார்களேயானால் அக்காணிகள் அவர்களதுஉடைமையாக மாட்டா." பாரம்பரிய காணி உடைமைகளை நசித்துச் சிதைப்பதாக இச்சட்டத்தின் பிரிவுகள் அமைந்திருந்தன. பாரம்பரியமாகக் குடி மக்களின் உடைமையாகக் காணப்பட்ட காணிகள் அவர்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டன. இத்தகைய காலனித்துவக் காணிக் கொள்கைகளின் பயனாகக் காணி அற்ற நிலையும், விவசாயிகள் இடையே வறுமையும் ஏற்படலாயின. தமதுகாணிக்கொள்கை விளைவித்த பாதகமான தாக்கங்கள் பற்றி சுமார் ஒரு நூற்றாண்டின் பின்னரே பிரித்தானியர் உணரலாயினர் காணிக் கொள்கையில் மாற்றம் கொண்டுவரப்படல்வேண்டும் என, இலங்கைத்தலைவர்கள் வற்புறுத்தத் தொடங்கினர். இந்நிலையில் 1927 ஆம் ஆண்டு முதலாவது காணி ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. இவ்வாணைக் குழுவின் சிபார்சுகளின்விளைவாக 1935 ஆம் ஆண்டு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது.வேகமானகாணிக் குடியேற்ற யுகம் ஒன்றின் தோற்றத்திற்கு இச் சட்டம் வழிவகுத்தது எந்த விதமான அடிப்படை மாற்றமும் இன்றி இன்னும் இக் கொள்கை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

சுதந்திரத்தின் பின்னர், இரண்டு காணி ஆணைக்குழுக்கள் இது வரை இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்டன.

1. 1959 ஆம் ஆண்டு காணி ஆணைக் குழு
2. 1987 ஆம் ஆண்டு காணி ஆணைக் குழு

இலங்கைத் தீவின் மொத்த நிலப்பரப்பு 6,570,134 ஹெக்டேயர் (16, 228, 230 ஏக்கர்கள்) ஆகும் இவற்றுள் 5,403,899 ஹெக்டேயர் (13, 347, 630 ஏக்கர்கள்) காணி அரசுக்குச் சொந்தமானவையாகும். மிகுதி 1, 166, 235 ஹெக்டேயர் (2,880,600 ஏக்கர்கள்) காணி தனியாருக்குச் சொந்தமானவை ஆகும். எனவே இலங்கையில் மொத்தக் காணிகளில் 82.3 சத வீதமானவை அரசுக்குச் சொந்தமானவையாக இருப்பது குறிப்பிடத்தக்கது இவ்வாறு காணியுடைமையில் ஏறத்தாழ தனி உரிமையினைக் கொண்டுள்ள அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற காணிக் கொள்கை, நாட்டில் பல சமூக பொருளாதார விளைவுகளை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளது

1935 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு பட்டபெயர்களிலான குடியேற்றத் திட்டங்கள் மூலம் காணிகளின் மறுபகிர்வினை அரசாங்கம் மேற் கொண்டது.

1. பாரிய குடியேற்றத் திட்டங்கள்.
2. உயர் நிலக் குடியேற்றத் திட்டங்கள்
3. கிராம விரிவாக்கத் திட்டங்கள்.
4. இளைஞர் குடியேற்றத் திட்டங்கள்.
5. காணிக் கொடைகள் (சிறப்பு ஏற்பாடுகள்).
6. அத்துமீறிய குடியேற்றங்களை ஒழுங்குபடுத்துதல்.
7. நடுத்தர மட்டத்திலான நீர்ப்பாசனத்திட்டங்கள்.
8. மழை நீர்ப்பாசன பண்ணை அபிவிருத்திக் குடியேற்றத் திட்டங்கள்.

மேற் கூறப்பட்ட பெயர்களிலான பல்வேறு பட்ட திட்டங்கள் மூலம் அரசாங்கத்தினால் காணி பகிர்ந்தளிக்கப் பட்டு, மக்கள் குடியமர்த்தப் பட்டனர். காணி அற்றோருக்குக் காணி வழங்குதல். இதன் மூலம் காணிப் பகிர்வில் நிலவும் சமன் இன்மையைக் குறைக்கத்தக்க வகையில் காணி மறு பகிர்வினை மேற் கொள்ளுதல், உற்பத்தியினை குறிப்பாக நெல் மற்றும் உப உணவு உற்பத்தியினைப் பெருக்குதல். கிராமிய மட்டத்தில் நிலவும் வேலையின்மையை நீக்குதல். மக்களின் வருமான மட்டத்தினை அதிகரிக்கச் செய்வதன்மூலம் கிராமிய வறுமையினை நீக்குதல். பிரதேச ரீதியான அபிவிருத்தியினை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு பட்ட அபிவிருத்தி நோக்கங்கள் கருதி 1935 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறுபட்ட குடியேற்றத் திட்டங்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இலங்கை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1936 - 1988 காலப் பகுதியில் இலங்கை முழுவதும் 813, 495 ஹெக்டேயர் காணி அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டது. இக் காணிகள் 1, 439, 407 ஆட்களுக்குப் பகிர்ந்து ஒதுக்கப்பட்டது. ஆனால், இக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் அதனது அபிவிருத்தி நோக்கங்கள் அடையப்பட்டனவா என்ற வினா, இக் குடியேற்றத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்ட காலத்திலிருந்தே எழுப்பப்பட்டு வந்துள்ளது. இன்று இலங்கையின் கிராமியத் துறையில் காணப்படும் பின்வரும் நிலைமைகள் இப் பெறுமதி வாய்ந்த வினாவிற்கு விடையாக அமையும்.

★ 27 சத வீதமான குடும்பங்கள் காணிகள் அற்றவையாக உள்ளன.

★ 42. 4 சத வீதமான காணி, உடைமைகள் இரண்டு ஏக்கருக்கும் குறைவானவை ஆகும்.

82 சத வீதமான கிராமியக் குடும்பங்களின் மாதாந்த வருமானம் 400/- ரூபாவிற்கும் குறைவாகக் காணப்படுகிறது.

★ 44 சதவீதமான குடும்பங்கள் 200/- ரூபாவிற்கும் குறைவான மாத வருமானத்தை மட்டுமே பெற்று வருகின்றன.

★ தொழில் அற்றோரில் 70 சதவீதத்தினர் விவசாயிகளாகக் காணப்படுகின்றனர்.

இவையெல்லாம் எவ்வாறு நிகழ்ந்தன? சகல அரசாங்கங்களதும் அபிவிருத்தித் திட்டங்களில் காணி முக்கிய இடம் பெற்றிருந்த போதிலும் காணியின்மை, கிராமிய வறுமை, வேலையின்மை ஆகிய பிரச்சினைகள் மோசமடைந்துள்ளன என்பதனையே இத்தரவுகள் காட்டுகின்றன. இத்தரவுகள் - தகவல்கள் எமக்குப்புலப்படுத்தும் உண்மை என்னவெனில், அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட பெயர்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் தமது அபிவிருத்தி நோக்கங்களை அடையத் தவறி விட்டன என்பதேயாகும். இந்நிலையில் தொடர்ந்து பதவிக்கு வரும் எந்தவொரு அரசாங்கமும், குடியேற்றத் திட்டங்கள் தொடர்பானகொள்கையினை - நடைமுறையினை மாற்றாமல் 1935 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஒரேமாதிரியாகப் பின்பற்றியமைக்குக் காரணம் என்ன? அவ்வாறாயின் அரசாங்கம் தமது குடியேற்றத் திட்டங்கள் மூலம் வேறுஏதாவது வெளிப்படுத்தாத-வெளிப்படுத்த முடியாத நோக்கங்களில், வெற்றியடைந்துள்ளதா? இலங்கை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரிய குடியேற்றத்திட்டங்களில் 340 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது (1956 ஆம் ஆண்டு வரை) என, 1959 ஆம் ஆண்டு காணி ஆணைக்குழு கணிப்பிட்டது. ஆனால் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் 25 மில்லியன் ரூபா மட்டுமேயாகும். எனவே இக் குடியேற்றத் திட்டங்கள் பொருளாதார ரீதியில் பெருமளவு தோல்வியே கண்டுள்ளன. அவ்வாறாயின் 1935 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான காலப்பகுதியில், கல்லோயாத் திட்டம் தொடக்கம் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் வரை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வேறுபட்ட குடியேற்றத்திட்டங்களினால் நிறைவேற்றப்பட்டது என்ன? இப் பெறுமதிவாய்ந்த வினாவிற்கு விடை காண்பதே, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

(தொடரும்)

# மீண்டும் பதவிக்குவர முயற்சிக்கப் போவதில்லை

# கனடா நாடுகடத்துவோர் தொகை வெகுவாக அதிகரிப்பு

அங்கேயே வாழலாம் என்ற நோக்கிலும் உயிரைப் பணயம் வைத்து எவரும் செல்லவில்லை சிலவேளை, மேற்கு ஐரோப்பாவிற்கு ஓடியவர்களை அவ்வாறு கொள்ளலாம். ஆனால், தமிழ்நாட்டிற்கு ஓடியவர்கள் அனைவரும், சிங்கள இனவாதப் படுகொலைகளுக்குப் பயந்து அஞ்சி உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்கே ஓடினார்கள். அவர்கள் கோழைகளாகவும் இருக்கலாம் இல்லாமலும். இருக்கலாம் ஆனால் அடைக்கலம் கோரியவர்களுக்கு அபயம் அழிப்பதே பண்பு

இதேவேளை, அன்று இலங்கைத் தமிழ் அகதிகளை வைத்து இந்தியா அரசியல் நடத்தியது ஆனால் இன்று அரசியல்வாதிகளின் அதிகாரப் போட்டியில் இலங்கைத் தமிழர் பலிகடாவாக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில், இன அழிப்பிற்கு அஞ்சி உயிரைப் பாதுகாக்கவென அகதிகளாகச் சென்ற குழந்தைகளும், பெண்களும், வயோதிபர்களும் கோழைகளாகத் தெரிகின்றனர் இதனைத் தெரிவிப்பவர்கள தனது சொந்த நாட்டிலேயே பாதுகாப்பு பித்து பிடித்து இரவு, பகல் என்றில்லாமல், 'கறுப்புபூனைகளின்' பாதுகாப்பினுள் முடங்கிக் கிடக்கும் வீரம்மிகு' செல்வி ஜெயலலிதாவின் அரசாங்க உத்தியோகஸ்தர்கள்.

இதேவேளை, தமிழக அரச அதிகாரிகளின் குற்றச்சாட்டிலும் சில உண்மைகள் இருக்கத் தான் செய்கின்றன. இலங்கையில் தற்பொழுதும் பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றார்கள். அவர்களின் ஒரு பகுதி இராணுவ ஆக்கிரமிப்பினுள்ளும், ஒரு பகுதி புலிகளின் பாதுகாப்பினுள்ளும் உள்ளனர். இவர்கள் அனைவரும் நாட்டை விட்டு அகதிகளாக ஓட வாய்ப்பு கிடைக்காமையினாலோ அன்றி முடியாமலோ இருக்கவில்லை. என்ன நெருக்கடிவந்தாலும் இங்கேயே வாழ்வோம் என்ற நோக்கிலேயே உள்ளார்கள்.

ஆனால், 1990 யூனில் போர் தொடங்கியதில் இருந்து பாதுகாப்பான அகாவது யாழ். குடாநாட்டிலிருந்தே- ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக வெளியேறினர். இவர்கள் யாவரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி பயத்தினாலேயே இப்பகுதிகளில் இருந்து வெளியேறினர் இவர்கள் அனைவரும் தமிழக அரச அதிகாரிகள் குறிப்பிட்டது போல் கோழைகளே இவர்கள், தமிழருக்கு எதிரான போராட்டத்தை துணிந்து எதிர் கொள்ள முடியாத பச்சோந்திகளே!

இதில் சிலர் வாதிடலாம், இராணுவ நடவடிக்கை நடக்கும், அதனால் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை இதனால் முன் கூட்டியே புத்திசாலித் தனமாக வெளியேறினோம் என்று. ஆனால், இன்று அவர்கள் அங்கிருந்து விரட்டப்படும் போதுதான் எது புத்திசாலித்தனமானது என்பது தெரியவரும். அதாவது மீண்டும் ஒரு இராணுவ அடக்குமுறைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் போது தான் தமது கடந்த காலத் தவறுபுரியவரும்.

# முயற்சிக்கப் போவதில்லை - கொர்பசேவ்

(பரிஸ்)

தற்போது மீண்டும் பதவிக்கு வர தாம் முயற்சிக்கப் போவதில்லை என முன்னைநாள் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் பிரான்ஸ் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மொஸ்கோவில் படமாக்கப்பட்ட இப் பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடும் போது;

'ஓய்வு பெறும் எண்ணம் எனக்குக் கிடையாது. அல்லது வெளி நாடு செல்லும் எண்ணமும் எனக்கில்லை. எனது நாட்டுடனான தொடர்பை அறுத்துக் கொண்டு வெளி நாட்டில் வசதியாக வாழவும் நான் விரும்பவில்லை'' என்றும்,

''கடைசி வரை இந்த நாட்டிலேயே வாழ்வேன். ஆனால் தற்போது அதிகாரப் போராட்டத்தில் இறங்கவும் நான் விரும்பவில்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

# கருங்கடல் கடற்படை ரஷ்யா-உக்ரைன் இணக்கம்

(மொஸ்கோ)

கருங்கடலில் நிலை கொண்டிருக்கும் முன்னாள் சோவியத் யூனியனின் கடற்படைப் பிரிவை தத்தமது கட்டுப்பாட்டினுள் எடுத்துக் கொள்ள ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சினும் உக்ரைன் அதிபர் கிரவ்சுக்கும் எடுத்த நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள இரு தலைவர்களும் உடன்பட்டுள்ளனர்.

அதேவேளை உக்ரைன், மற்றும் ரஷ்யாவின் கூட்டுப் பாராளுமன்றக் குழுவொன்று இவ்விவகாரம் தொடர்பாக ஆராய நியமிக்கப்படுமென அவர்கள் இணங்கியுள்ளனர் என மொஸ்கோவில் ஏஜென்சி செய்திகள் கூறுகின்றன.

# லண்டனில் குண்டு வெடிப்பு இருவர் பலி; பலர் படுகாயம்

(லண்டன்)

லண்டனில் நேற்று முன்தினமிரவு கார்க்குண்டு ஒன்று வெடித்தமையால் இருவர் கொல்லப்பட்டதுடன் சுமார் ஐம்பது பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கன்சர் வேட்டிவ் அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வந்த ஒரு சில மணி நேரத்திற்குள்ளேயே இக் குண்டு வெடிப்பு குறிப்பிடத்தக்கது.

குண்டு வெடிப்பதற்கு சுமார் முப்பது நிமிடங்களுக்கு முன்பாக ஐரிஷ் காரரர் என்ற சந்தேகிக்கப்படும் ஒரு குரல் தொலைபேசி மூலம் எச்சரித்ததாக பொலிசார் கூறுகின்றனர்.

வெடிப்பு நிகழ்ந்த பகுதியில் பல கட்டடங்களுக்கும் வாகனங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

குண்டு வெடிப்பு நேர்ந்த போது பலரும் தேர்தல் வெற்றிகளைக் கொண்டாடுவதில் மூழ்கியிருந்ததாகச் சொல்லப் படுகிறது.

# தொகை வெகுவாக அதிகரிப்பு

(ரொரன்டோ)

அகதிகள் எனத் தஞ்சம் புகுந்த வெளிநாட்டவர்களை மோசடிமிட்டு வரும் கனடா நாடு கடத்துவோர் எண்ணிக்கையை இப்போது வெகுவாக அதிகரித்துள்ளது

கடந்த ஜனவரி பெப்ரவரி மாதங்களில் மட்டும் 1 202 பேர் வரையில் நாடு கடத்தப்பட்டதாக குடிவரவு அமைச்சர்பேர்னாட்வல்கோட் தெரிவித்துள்ளார்.

குடிவரவு மற்றும் அகதிக் கொள்கையில் கனடாவின் தாராளப்போக்கு பாரம்பரிய மிக்கதொன்றாகும் ஆயினும் கடந்த ஆண்டு கனடா 4400 பேரை நாடு கடத்தியுள்ளது 1990 இல் 2 800 பேரையும அதற்கு முன்னைய ஆண்டில் 2,000 பேரையும் கனடா நாடு கடத்தியுள்ளது என்றும் தெரிவித்தார்.

கனடாவில் வாழத் தகுதியற்றவர்கள் எனக் கருதப்படுவோர் மட்டுமே நாடு கடத்தப் படுகின்றனர் எனவும் குடிவரவு மற்றும் அகதிகள் சம்பந்தப்பட்ட விவகாரத்திலான உறுதிப்பாடுகட்கு அமையவே இவ்வாறு செய்யப்படுகின்றதெனவும் தெரிவித்தார்.

# விமர்சன உரிமையையே ஆளும்கட்சி மறுக்கிறது - நல்லசிவம்

(சென்னை)

ஜனநாயக நாட்டில் முதலமைச்சர் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க முடியாது எனவும். இத்தகைய விமர்சகக் கருத்தைத் தெரிவிக்கும் அடிப்படை உரிமையை ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அஜாரகம் மூலம் தடுக்கிறது என்று இந்திய மாக்சிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செயலாளர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுச் செயலாளர் ஏ. நல்லசிவம் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில், செல்வி ஜெயலலிதாவைக் கண்டிக்கும் சில பத்திரிகைகளை ஆளும் கட்சியினர் தடை செய்து வருகின்றனர் என்று அவர் குற்றம் சாட்டியிருக்கிறார். இத்தகைய பத்திரிகைகளை விற்கும் கடைகளைத் தாக்குவதாகவும் அவர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

# இந்திய மீன்பிடி படகுகட்கு இலக்கம் வழங்க முடிவு

(சென்னை)

பாக்குநீரிணைப் பகுதியில் கள்ளக் கடத்தலைத் தடுக்கவும் இந்திய மீன்பிடிப் படகுகளை சிறிலங்கா கடற்படையினர் தொடர்ச்சியாகச் சுடுவதினைத் தடுக்கவும் மீன்பிடிப்படகுகளுக்கு இலக்கங்களை வழங்குவதென சிறிலங்கா- இந்திய அதிகாரிகள் தரப்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கங்களைக் கண்ணில் படும்படி பெரிதாகப் படகுகளில் எழுதுவதெனவும் இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்

திருச்சி சுங்கப் பகுதி முதன்மைக் கலெக்டர் சேர்மன், சிறிலங்கா சுங்கப்பகுதி பிரதம கலெக்டர் லலித் ஆகியோர் சந்தித்துப் பேசி இவ்வாறு முடிவு செய்தனர்.

கச்சதீவு அருகே மீன்பிடிக்கச் செல்லும் படகுகளை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் சுட்டு விடுவதாக இந்திய மீனவர் அடிக்கடி புகார் தெரிவிக்கின்றனர்.

போராளிகள் பயன்படுத்தும் படகுகளையும் கடத்தலில் ஈடுபடும் படகுகளையும் மட்டுமே சிறிலங்கா கடற்படையினர் சுடுகின்றனர் என்பதை இந்திய கடற்படையினர் மறுக்கின்றனர்.

கடத்தல் காரர்களின் நடமாட்டம் பற்றி தமக்கிடையில் இரு தரப்பு அதிகாரிகள் தகவல் பரிமாறிக் கொள்ள வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவும் மற்றும் கள்ளக்கடத்தல் காரர்கள் போல வந்து கடத்துபவர்கள் பற்றியும் புலிகள் படகுகள் உட்பட அனைத்து தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர்

# மீனவர் சுடப்படுவதை தடுக்க புதியதிட்டம்

(சென்னை)

தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது சிறிலங்கா கடற்படையினரால் சுடப்படுவதைத் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் ஒரு புதுத்திட்டம் ஏற்பாடாகி வருகிறது. இதனை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மாநிலசட்டப் பேரவையில் தெரிவித்தார்.

ஈழநாதம்

# பலமிழக்கும் அரசாங்கம் குற்றச்செயல் புரிகிறது

## ஐ. ஐ. தே முன்னணி கண்டனம்

(கொழும்பு)

பொதுமக்களின் ஆதரவை வெகுவாகஇழந்துவரும் ஆளும் கட்சியின் குழுவினர் குற்றச் செயல்களை நாடுகின்றனர் என தெஹிவளையிலும் பிலியந்தலையிலும் தமது கட்சி ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் பிலியந்தலையில் தமதுகட்சியின் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துவிட்டு திரும்பிய ஆதரவாளர்கள் அரசாங்க அமைச்சர் தலைமையில் வந்த குழு ஒன்றினால் தாக்கப்பட்டு அவர்கள் வந்த வாகனங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. இது குறித்து பிலியந்தலைப்பொலிஸாருக்கு அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தி. மு. க. முன்னணிப் பேச்சாளர்

# வெற்றிகொண்டான் கைது; கருணாநிதி கண்டனம்

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேடைப் பேச்சாளரான வெற்றிகொண்டான் நேற்று முன்தினம் மாலை தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொதுக் கூட்டமொன்றில் பேசும் போது பிரிவினை வாதத்தை தூண்டக் கூடிய வகையிலும், மத உணர்வுகளைப் புண்படுத்தக் கூடிய வகையிலும் பேசியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இக் கைதிகளைக் கண்டித்து தி. மு. க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் வெற்றிகொண்டான் மீது சட்ட மன்றத்தில் உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டு அது உரிமைக் குழுவிற்கு விடப்பட்டிருக்கும் நிலையிலும், தனியார் மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை பெற்றுள்ள நிலையிலும் பொலிசார் அவரைக் கைது செய்துள்ளமையினைக் கண்டித்துள்ளார்.

அத்துடன் தொடர்ச்சியாக உள்ள விடுமுறை நாட்களைக் கவனத்தில் கொண்டு திரு. வெற்றி கொண்டான் நீதி மன்றத்தில் ஜாமீன் பெறுவதைத் தடுக்கும் வகையில் பொலிசார் திட்டமிட்டு செயற்பட்டிருப்பது அரசின் கெட்ட நோக்கைக் காட்டுவதாக தெரிவித்தார்.

மேலும் தமிழகத்தில் எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரமும், நசுக்கப்பட்டு வருவதாகவுமகருணாநிதிகண்டனம் தெரிவித்துள்ளார்.

# சிலைகளைப் பாதுகாக்க தனியான படைப்பிரிவு

(சென்னை)

தமிழகக் கோயில்களிலிருக்கும் விலையுயர்ந்த உலோகத் திருமேனிகளையும், சிலைகளையும், ஆபரணங்களையும் பாதுகாப்பதற்காக தனியான பாதுகாப்புப்படை ஏற்படுத்தப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

நேற்று முன் தினம் சட்டப் பேரவையில் அறநிலையத் துறை நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் பேசிய முதல்வர் மேலும் கூறுகையில் இப் பாதுகாப்பு பிரிவுக்கு ஆயிரம் காவலர்களும் மூவாயிரம் முன்னாள் இராணுவத்தினரும் நியமனம் செய்யப்படுவர் என்று தெரிவித்தார்.

ஆலயப் பாதுகாப்பிற்கென அவர்களுக்கு துப்பாக்கிகளும் வழங்கப்படும் எனவும் இந்தப் பாதுகாப்புத் திட்டதை செயல்படுத்த ஆண்டொன்றுக்கு ஐந்தேகால் கோடி ரூபாய் செலவிடப்படுமென வும் தெரிவித்தார்.

மேலும் கோயில்களில் திருட்டைத்தடுக்க அபாய அறிவிப்பு மணி பொருத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இந்தியா - சீனா சமூக நல ஒத்துழைப்பு ஒப்பந்தம்

இந்தியாவும் சீனாவும் சமூக நலவாழ்வுத் துறையில் ஒத்துழைப்பதற்கான உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டுள்ளன. இந்தியா வந்துள்ள சீனாவின் சிவில் விவகார அமைச்சர்திரு. சியூனைபூவுடன் அமைச்சர் சீதாராம்கேசரி தொடர்ந்து நடத்திய பேச்சுக்களையடுத்து இந்த உடன்படிக்கை கையெழுத்தாகியது. சீன அமைச்சர் மட்டக் குழு இந்தியவில் தங்கியிருக்கும் போது பல தொண்டு அமைப்புக்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது

# இரு பிரசவத்தில் 7 குழந்தைகள்

தலைப் பிரசவத்தில் அடுத்தடுத்து மூன்று ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்த பெண்மணியொருவர்இரண்டாவது பிரசவத்தில் ஒரே சூலில் நான்கு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

பிபிலையைச் சேர்ந்த ஹீங் மெனிக்கா என்ற பெண்ணே இந்த பிள்ளைச் செல்வங்

# அணுவாயுத வசதிகள் ஈராக்கில் அழிப்பு

(பக்தாத்)

பக்தாத்திற்குத் தென்கிழக்கேயுள்ள தனது அணுவாயுத வசதிகளை ஈராக் அழிக்கத் தொடங்கியிருப்பதாகச் சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக்கின் அணு ஆயுதத் ... கருதப்படும் அலி அத்திர் வளாகத்தில் அணு ஆயுத வசதிகளை அழிக்கும் பணி கடந்த வியாழனன்று தொடங்கியிருப்பதாக வியன்னாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செங்கல்பட்டில் விசாரணை

# கண்டியில்எதிர்க்கட்சிகளின் மாபெரும் பொதுக் கூட்டம்

(கொழும்பு)

எதிர்க் கட்சிகளின் கூட்டு முன்னணி வரும் 24ஆம் திகதி கண்டியில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

பிரேமதாசா உடுகம்பொல விவகாரம் மற்றும் தேர்தல் ஆணையாளர் அறிக்கை இக் கூட்ட நிகழ்ச்சிநிரலில் முக்கிய இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# இல. திரும்பிய அகதிகள் கிளிநொச்சி வந்தனர்

(வவுனியா)

சமீபத்தில் தமிழகத்திலிருந்து திருக்கோணமலை வந்து அங்கிருந்து வவுனியா வரை வந்து சேர்ந்த கிளிநொச்சி மாவட்ட அகதிகள் பலர் கிளிநொச்சி செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கியது.

சுமார் 100 குடும்பங்கள் தாண்டிக்குளம் அகதிகள் பராமரிப்பு நிலையத்திலிருந்து புறப்பட்டு பேயாடி கூழாங்குளம் இராணுவ சோதனை நிலையம் ஊடாக கிளிநொச்சிக்குச் சென்றனர்.

அகதிகள் பராமரிப்பு நிலையப் பகுதியில் தொடர்ந்து வாழமுடியாத நிலையில் இக் குடும்பங்கள் தமது சொந்த மாவட்டத்திற்குத் திரும்பின.

# புத்தாண்டு நிகழ்ச்சி

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் புத்தாண்டு நிகழ்ச்சிகள் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் தொடக்க உரையை புலவர் ஈழத்துச் சிவானந்தன் நிகழ்த்துவார்.

நாதஸ்வரக் கலைஞர்களின் இசைநிகழ்ச்சியும் ஈழத்தின்பிரபல இசை நாடகக் கலைஞர்களின் இசைநாடகம் 'சத்தியவான் சாவித்திரி'யும் இடம் பெறவுள்ளன.

# கோட்டை ரயில் நிலையத்தில் பிரசவம்

(கொழும்பு)

ரயிலில் ஊர் திரும்புவதற்காக கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு கடந்த செவ்வாய் இரவு வந்திருந்த தமிழ்ப் பெண் ஒருவர் புகையிரத நிலைய 3 ஆவது

# அம்பாறை அகதி முகாமில் தொற்றுநோய் பரவுகிறது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அகதி முகாம்களில் வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல், அம்மை முதலிய தொற்று நோய்கள் வேகமாக பரவி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுகாதார வசதிகள், நோய்த் தடுப்பு மருந்து வசதிகள் எதுவுமற்ற நிலையில் அகதிமுகாம்களில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் இந்த நோய்களினால் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

நோய்கள் ஏற்பட்ட பின்னரும் கூட போதிய மருத்துவ வசதிகள் இம்மக்களுக்குக் கிடைக்கவில்லை.

சிங்கள, முஸ்லிம் மக்களின் சுகாதாரவசதி தொடர்பாக அக்கறை எடுத்துவரும் சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களை உதாசீனம் செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# குண்டு வெடித்த இடத்தை பிரேமதாசா பார்வையிட்டார்

(கொழும்பு)

டிருந்த குண்டு வெடித்திருப்ப

# தமிழ் அலுவலர் பற்றாக்குறை

பொது நிர்வாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சில் போதியளவு தமிழ் அதிகாரிகள் இல்லாமையால் அங்கு அலுவல்களுக்காக செல்லும் தமிழ் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

இந்த அமைச்சில் ஒரேயொரு தமிழ் உயரதிகாரி மட்டுமே கடமையாற்றுகிறார். அவர்கூட வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தபால்கள்வந்தன

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட 182 தபாற்பொதிகளும் யாழ். தபாற் கந்தோருக்கு நேற்று எடுத்துவரப்பட்டன. இப் பொதிகள் இன்று தரம் பிரிக்கப்பட்டு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும்.

# அன்னை பூபதி தினம் சில்லாலையில் அனுஷ்டிப்பு

(பண்டத்தரிப்பு)

தியாகி அன்னை பூபதியின் நாலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சில்லாலையில் கடந்த புதன்கிழமை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது

சில்லாலை நல்லாயன் சனசமூக நிலையம், லங்காமாதா சனசமூக நிலையம், சில்லாலை மத்தி சனசமூக நிலையம், மாதர்சங்கம் ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இவ் உண்ணாவிரத நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினர்

இதேவேளை பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் சனசமூக நிலையம் முன்பாக தியாகி அன்னைபூபதி நினைவாக அடையாள உண்ணா நோன்பு நிகழ்ந்தது நேற்று முன்தினம் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை நடைபெற்ற இந் நிகழ்வில் பல சிறுவர்களும் வயோதிபர்களும் கலந்துகொண்டனர். (ச)

## குருக்கள் புதுக்குளத்தில்

# சுழற்சி முறையிலான உண்ணாவிரதம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ளபூவரசங்குளப் பிரதேசத்தில் குருக்கள்புதுக்குளம் கிராமத்தில் தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் 19ஆம் திகதியில் இருந்து இப்பகுதியில் அலங்காரப் பந்தல் அமைக்கப்பட்டு, அஞ்சலி உரை நிகழ்த்துதல், அடையாள உண்ணாவிரதம் இருத்தல் போன்ற நிகழ்வுகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

குருக்கள் புதுக்குளம், கிறிஸ்தவகுளம், நித்தியநகர் ஆகிய கிராமங்களைச்சேர்ந்த மக்கள் சிறப்பான முறையில் இந்த நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ளனர். (தி)

# அராலிமீது எறிகணைவீச்சு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதிகளில் நிலை

பிலையைச் சேர்ந்த ஹிங் மெனிக்கா என்ற பெண்ணே இந்த பிள்ளைச் செல்வங்களைப் பெற்றவர் ஆவார்.

... தார்.

ஈராக்கின் அணு ஆயுதத் திட்டத்தின் கேந்திரமாகக்

# மரண அறிவித்தல்கள்

## செல்வி குமுதினி சண்முகசாமி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமுதினி சண்முகசாமி 10-04-92 இல் காலமானார். இவர் சண்முகசாமி (நீர்பாசனத்திணைக்களம்) அன்னலட்சுமி தம்பதிகளின் அருமைப் புத்திரியும், தயாளினி, நந்தினி, ரோகினி ஆகியோரின் அருமைச் சகோதரியும், சிவசாமி (அவுஸ்திரேலியா), இராமநாதன் (இந்தியா) ஆகியோரின் பெறாமகளும், திருமதி புஸ்பவதி இரத்தினசிங்கம், திருமதி பரமேஸ்வரி மாட்டீன் (அவுஸ்திரேலியா), திருமதி பூலோகநாதன் அருள்சோதி (அரசினர் வைத்தியசாலை, உருத்திரபுரம்) ஆகியோரின் மருமகளுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் மல்லாகத்தில், அவரது இல்லத்தில் 12-04-92 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரதநிலைய வீதி,
மல்லாகம்.

தகவல்:
திருமதி அன்னலட்சுமி
சண்முகசாமி (தாயார்)

[2451]

## பிலிப்பு ஜேம்ஸ் (அன்பு)

பிலிப்பு ஜேம்ஸ் (அன்பு) காலமாகிவிட்டார். இவர் செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற றீற்றம்மாவின் அன்புக் கணவரும், பிலிப்புராசா (இத்தாலி), சித்திரா (யாழ் பல்கலைக் கழகம் 2ஆம் வருட கலைப்பிரிவு), ரவீந்திரா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கிறேசின் மாமனாரும், சுதர்சனின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக (12-04-92) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித பிலிப்பு நேரியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

[2454]

தகவல்: சித்திரா (மகள்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## செங்கல்பட்டில் விசாரணை

(சென்னை

ராஜீவ்காந்தி கொலை வழக்கின் விசாரணைகள் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் நடைபெறவிருப்பதாக பி.ரி.ஐ. செய்தித்தாபனம் கூறியுள்ளது.

செங்கல்பட்டு நீதிமன்றத்தில் பகிரங்கமான முறையில் இவ்வழக்கை நடத்தவும், அடுத்த மாத இறுதியில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யத் தயாராகி வருவதாகவும் சி.பி.ஐ. வட்டாரங்கள் ஆலோசனை நடத்தி வருவதாக பி.ரி.ஐ யின் தகவல் மேலும் தெரிவிக்கின்றது

## முடிவுக்கு காத்திருக்கிறார்கள்

(சென்னை)

தமிழக விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் புரட்சிகர இளைஞர் அமைப்பு உள்ளிட்ட அதன் தொடர்பு இயக்கங்களையும் தடை செய்யும் விஷயத்தில் மத்திய அரசின் நடவடிக்கைகளுக்காகத்தான் நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம் -இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

## தவறிவிட்டது

மாங்குளம் சாரரியத் தவறணைக்கு அருகாமையிலுள்ள கடையின் முன் பக்கம் தங்கச் சங்கிலி ஒன்று தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் மனமிரங்கி கோ. பாலசுடபிரமணியம், அரசடி, கொக்குவில் மேற்கு கொக்குவில் அல்லது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி காரியாலயம், மாங்குளம் என்ற விலாசத்தில் சமர்ப்பித்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்

(2453)

கடந்த செவ்வாய் இரவு வந்திருந்த தமிழ்ப் பெண் ஒருவர் புகையிரத நிலைய 3 ஆவது மேடையில் குழந்தை ஒன்றை பெற்றெடுத்தார்

புனர்வாழ்வு நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு வந்திருந்தாரெனவும் மீண்டும் திருக்கோணமலை திரும்புவதற்காக கோட்டை ரயில் நிலையத்திற்கு சென்ற போதே மேற்படி சம்பவம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

### அரசால்

வெளியிட்டதனை அடுத்தே தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் தான் மேலும் விபரங்களை வெளியிடுவதைத் தடுப்பதற்காக சக்தி மிக்க அரசியல்வாதிகள் பல வழிகளிலும் முயன்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது லியனாராச்சி கொலை வழக்கு தொடர்பாக ஏப்ரல் 6ஆம் திகதி ஆஜராகக் கோரி சி.ஐ.டி. பொலிசார் நீதிமன்றக் கட்டளையை பெற்றிருப்பதாக தகவல் சாதன மூலம் அறிந்தேன். இந்தக் கட்டளை ஒருபோதும் என்னிடம் கையளிக்கப்படவில்லை.

ஆனால் குறிப்பிட்ட தினத்தில் ஆஜராகத் தயாராக இருந்தேன். ஆனால் சி.ஐ.டி. காரியாலயத்தில் இருந்து திரும்பும்போது என்னைக் கடத்துவதற்கும் பின்பு கொல்வதற்கும் திட்டமிடப்பட்டதனை அறிந்தேன். இச்சூழ்நிலைகளில் எனக்கு உடல் ரீதியாக தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் இவ்விசாரணை திட்டமிடப்பட்டதா என்பதும் சந்தேகமானதாகவே உள்ளது எனவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### தாக்கிய

க்கைகளில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளைத் தேடிப்பிடிப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## பிரேமதாசா பார்வையிட்டார்

(கொழும்பு)

மகரகம பகுதியில் நேற்று முன்தினம் குண்டுவெடிப்பு நடைபெற்ற இடத்திற்கு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா, பிரதமர் டி.பி. விஜயதுங்கா மற்றும் அமைச்சர்கள் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டார்.

அம்பாறையில்நேற்று முன்தினம்டொயாட்டோபஸ் வண்டி ஒன்றின் எண்ணைத் தாங்கிக்கு கீழே மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்திருப்பதாக அரசாங்க பகுப்பாய்வு திணைக்களம் கூறியுள்ளது.

### அதிகாரிகள்

யர் பற்றாக்குறை நிலவுகிறது.

பாடசாலைகளில் தளபாட வசதிகளோ-வேறு அடிப்படை வசதிகளோ அற்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றின் காரணமாகப் பல மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். (தி)

### அம்பாறை

தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பஸ்சில் இருந்தவர்களும் அருகில் நின்ற பஸ்களில் இருந்தவர்களும் குண்டுவெடிப்பில் பலியாகியுள்ளனர். பஸ்சின் சாரதியும் நடத்துனரும் தப்பி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது

### உடுகம்பொலவின்

ன்ட், சண்டேரைம்ஸ் ஆகிய பத்திரிகையின் ஆசிரியர்களும் செய்தியாளர்களுமே இவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

அனுராதபுரத்தில் தேர்தலின் போது கரும்பூனைகள் கொலை செய்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலரின் படங்களை இலங்கை கம்யூனிஸ்ட்கட்சிப் பத்திரிகையான அத்த வெளியிட்டிருந்தது. ஏப்ரல் 18 இல் வெளியான இச் செய்தி மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது என்ற குற்றத்தின் பேரில், பத்திரிகை ஆசிரியர் லொக்கு பண்டாரவணிகசேகராவுக்கும், வெளியீட்டாளர் ஏ. தர்மதாஸாவுக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### இலங்கை வங்கி

இலங்கை வங்கிக்கு நேற்று விமான மூலம் பணம் எடுத்து வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### இராணுவ

பெரும் ஆத்திரம் அடைந்துள்ளதாகவும், கூட்டுப்படைத் தலைமையக அதிகாரிகள் வடக்கு-கிழக்கு யுத்த களப் பகுதிகளுக்கு அனுமதி அளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவுக்கும், இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்ணாவுக்குமிடையிலான பூசல் இப்போதைக்கு தீராது என்று தெரிவிக்கப்படுகிறது இவ்இழுபறியால் வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வரும் புது வருடத்திற்குப் பின்னர் புதிய திருப்பங்கள் ஏற்படலாம் என்றும் சொல்லப்படுகிறது.

## எறிகணைவீச்சு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை மக்கள் குடியிருப்புகளையும் கரையோரப் பகுதிகளையும் நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களையும் கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஊர்காவற்துறை இராணுவத்தினர் அராலிப் பகுதியை நோக்கி ஏவிய எறிகணைகள் அராலித்துறையையும் அதைஅண்டிய குடியிருப்பு பகுதிகளையும் நோக்கி மேற்கொள்ளப்பட்டது.

பத்து நிமிடங்கள் வரை நடைபெற்ற இவ் எறிகணைத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. (ச)

## 11 ஆவது அணி புறப்பாடு

இலங்கைத் தமிழ் அகதிகளைக்கொண்டபதினொராவது அணி நேற்று இராமேஸ்வரத்திலிருந்து இலங்கை புறப்பட்டது 147 இலங்கைத் தமிழ் குடும்பங்கள் இந்த அணியில் உள்ளனர். இலங்கைக்குதிருப்பி அனுப்பப்பட்ட அகதிகள் எண்ணிக்கை இதனையும் சேர்த்து இப்பொழுது 5750 ஆகும்.


ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4-00, 6-00 மணி

காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

Eagles Over London

(லண்டன் மேலாக கழுகுகள்) (சி/4144)